இந்தியா–பாகிஸ்தான்... முதல் பக்க தொடர்ச்சி

பாகிஸ்தானுக்கும் இடையிலான மோசமான அணு சக்திப் போரை நான் தான் தடுத்து நிறுத்தினேன் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் நேற்று தெரிவித்தார். வெள்ளை மாளிகையின் ரூஸ்வெல்ட் அறையில் மருந்து விலைகள் குறித்த செய்தியாளர் சந்திப்பின் போது இதுபற்றி அவர் கூறியதாவது: கடந்த சில நாட்களாக நடந்த வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த சனிக்கிழமை, எனது நிர்வாகம் முழுமையான மற்றும் உடனடி போர்நிறுத்தத்தை ஏற்படுத்த உதவியது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒரு நிரந்தர போர்நிறுத்தம் என்று நான் நினைக்கிறேன். இது அணு ஆயுதம் கொண்ட இரண்டு நாடுகளுக்கும் இடையேயான ஆபத்தான மோதலை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. போரை நிறுத்தினால் இரு நாடுகள் இடையே நடக்கும் அதிக வர்த்தகம் செய்ய உள்ளதாக நான் தெரிவித்ததே போர் நிறுத்தத்திற்கு ஒரு பெரிய காரணம்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானின் தலைமைத்துவம் அசைக்க முடியாததாகவும், சக்திவாய்ந்ததாகவும் இருந்தது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். நிலைமையின் தீவிரத்தை முழுமையாக அறிந்து புரிந்துகொள்ள அவர்களுக்கு வலிமை, ஞானம் மற்றும் மன உறுதி இருந்தது.

நாங்கள் நிறைய உதவி செய்தோம், மேலும் வர்த்தகத்திலும் நாங்கள் உதவினோம். நான் சொன்னேன், 'வாருங்கள், நாங்கள் உங்களுடன் நிறைய வர்த்தகம் செய்யப் போகிறோம்'. நீங்கள் போரை நிறுத்தாவிட்டால் வர்த்தகத்தை நிறுத்துவோம். நீங்கள் போரை நிறுத்தினால், நாங்கள் வர்த்தகம் செய்கிறோம். நீங்கள் போரை நிறுத்தவில்லை என்றால், நாங்கள் எந்த வர்த்தகத்தையும் செய்யப் போவதில்லை.

நான் அதைப் பயன்படுத்திய விதத்தில் மக்கள் ஒருபோதும் வர்த்தகத்தை உண்மையில் பயன்படுத்தியதில்லை, நான் உங்களுக்குச் சொல்ல முடியும், திடீரென்று அவர்கள், நாங்கள் போரை நிறுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் அதைச் செய்தார்கள். பல காரணங்களுக்காகச் செய்தார்கள், ஆனால் வர்த்தகம் அதில் பெரிய ஒன்று.

நாங்கள் பாகிஸ்தானுடன் நிறைய வர்த்தகம் செய்யப் போகிறோம். இந்தியாவுடனும் நிறைய வர்த்தகம் செய்யப் போகிறோம். இந்தியாவுடன் இப்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இரு நாடுகளும் மோதினால் அது ஒரு மோசமான அணு ஆயுதப் போராக இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம். அதனால் போரை நிறுத்தியதைப்பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். துணை அதிபர் வான்ஸ் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ரூபியோ ஆகியோரின் பணி மற்றும் முயற்சிகளுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் அதில் மிகவும் கடினமாக உழைத்தனர். இவ்வாறு கூறினார்.

டிரம்பின் இந்த அறிவிப்பு சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ரயிலில் ஏற முண்டியடித்த பக்தர்கள்

▶ சித்ரா பவுர்ணமி கிரிவலத்தை முடித்துக்கொண்டு, சொந்த ஊருக்கு திரும்பிச் செல்ல திருவண்ணாமலை ரயில் நிலையத்தில், நேற்று காட்பாடி-விழுப்புரம் சென்ற ரயிலில் ஏறுவதற்கு முண்டியடித்த பக்தர்கள் கூட்டம்.

பாஜ முன்னாள் எம்பி

நடிகை நவ்நீத் ராணாவுக்கு கொலை மிரட்டல்

பாக்.கில் இருந்து வந்தது

மும்பை, மே 13: அம்பாச முத்திரம் அம்பானி, அரசாங்கம் ஆகிய தமிழ் படங்களில் நடித்தவர் நவ்நீத் கவுர் ராணா. தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். இவர் 2019ம் ஆண்டு அமராவதி தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு எம்.பி. ஆனார். கடந்த தேர்தலில் இவர் அதே அமராவதி தொகுதியில் பாரதிய ஜனதா சார்பில் போட்டியிட்டு தோற்றுவிட்டார். இவரது கணவர் ரவி ராணா, 4 முறை சுயேட்சை எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் இருந்து மர்ம மனிதன் நவ்நீத் கவுர் ராணாவுக்கு போன் செய்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார். "உன்னை பற்றிய எல்லா தகவல்களும் எங்களிடம் உள்ளன. சில நாட்களுக்கு மட்டுமே பூமியில் நீ விருந்தாளியாக இருப்பாய். நாங்கள் உன்னை கொலை செய்வோம். குங்குமமும் இருக்காது. அதனை இடுபவர்களும் இருக்க மாட்டார்கள்." இவ்வாறு மர்ம மனிதர் மிரட்டல் விடுத்துள்ளார். குங்குமம் இருக்காது என மிரட்டல் காரர் கூறியதால், இவரது கணவர் ரவி ராணாவுக்கும் கொலை மிரட்டல் விடுத்தாக கருதப்படுகிறது.

இதுகுறித்து இருவரும் கார் போலீசில் புகார் செய்துள்ளனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த மிரட்டல் வெளிநாட்டில் இருந்து விடுக்கப்பட்டுள்ளதால் போலீசார் ஒன்றிய அரசின் ஏஜென்சிகளின் உதவியை நாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேயர் பதவிக்கு போட்டியிட்ட பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர்

மணிலா, மே 13: பிலிப்பைன்ஸில் நேற்று உள்ளாட்சி தேர்தல் நடந்தது. இதில் முன்னாள் அதிபர் ரோட்ரிகோ மேயர் பதவிக்கு போட்டியிட்டுள்ளார்.

பிலிப்பைன்சில் முன்னாள் அதிபர் ரோட்ரிகோ போதைப் பொருள் கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தபோது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில் மார்ச் மாதம் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற உத்தரவின்பேரில் ரோட்ரிகோ கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் பிலிப்பைன்சில் மேயர் உட்பட, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்த தேர்தலில் காவலில் வைக்கப்பட்டு இருக்கும் முன்னாள் அதிபர் ரோட்ரிக்கோவும் மேயர் பதவிக்கு போட்டியிட்டுள்ளார். இவர் டாவோ மேயராக வெற்றி பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 20 ஆண்டுகளுக்கு முன் ரோட்ரிகோ அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் மேயராக பதவி வகித்து வந்தது குறிப்பிடத்தக்கது. பிலிப்பைன்ஸ் சட்டத்தின்படி கிரிமினல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளவர்கள், தடுப்பு காவலில் உள்ளவர்களும் தேர்தலில் போட்டியிடலாம்.

பல்வேறு பிரிவினருக்கான

7 வருமான வரி படிவங்கள் வெளியீடு

புதுடெல்லி, மே 13: ஐடி ஆர் 1 முதல் ஐடிஆர் 7 வரை பல்வேறு பிரிவினருக்கு கணக்கீடு ஆண்டு 2025-26க்கான வருமான வரி படிவங்களை வருமான வரித்துறை வெளியிட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கு வருமான வரியில் முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. தனிநபர்கள் பங்கு முதலீடுகளின் மீது நீண்டகால மூலதன ஆதாயத்துக்கு ரூ.1.25 லட்சம் வரை வருமான வரி கிடையாது. அதற்கு மேல் 12.5 சதவீதம் வருமான வரி செலுத்த வேண்டும். இதற்கேற்ப 2025-26 கணக்கீட்டு ஆண்டுக்கு புதிதாக ஐடி ஆர் 1 மற்றும் ஐடிஆர் 4 ஆகிய படிவங்களை கடந்த ஏப்ரல் 29ம் தேதி வருமான வரித்துறை அறிமுகம் செய்தது. கணக்குகளை தணிக்கைக்கு உட்படுத்த தேவையற்ற தனிநபர்கள் ஜூலை 31ம் தேதிக்குள் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்ய வேண்டும்.

ஐடி ஆர் 1 (சகஜ்) மற்றும் ஐடி ஆர் 4 ஆகிய படிவங்கள் சிறு மற்றும் நடுத்தர வரி செலுத்துவோருக்கானது. மாதச்சம்பளம், ஒரு வீட்டின் மூலமான வருவாய், வட்டி உள்ளிட்ட இதர ஆதாரங்கள் மூலம் ஆண்டுக்கு ரூ.50 லட்சம் வரை ஈட்டுவோர் இதனை தாக்கல் செய்யலாம். இது போல், தொழில் மூலம் ஆண்டுக்கு ரூ.50 லட்சம் வரை ஈட்டும் தனிநபர்கள், நிறுவனங்கள் ஐடி ஆர் 4 படிவத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

மூலதன ஆதாய வரியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப ஐடிஆர் படிவங்கள் 2,3,5,6 மற்றும் 7 ஆகிய படிவங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மூலதன ஆதாய வரி 2024 ஜூலை 23ம் தேதிக்கு முன்பு, அல்லது பின்பு என பிரித்து குறிப்பிட வேண்டும். இதுபோல், நிறுவனங்கள், எல்எல்பி, கூட்டுறவு சொசைட்டிகளுக்கு ஐடிஆர் 5, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள நிறுவனங்களுக்கு ஐடி ஆர் 6, அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்களுக்கு ஐடிஆர் 7 படிவங்களை வருமான வரித்துறை வெளியிட்டுள்ளது.

வெள்ளித்தேர் கட்டுமானப் பணி ஆய்வு

▶ திருநெல்வேலி காந்தியம்மன், நெல்லையப்பர் திருக்கோயிலில் வெளித்தேர் கட்டுமானப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில், அறநிலையத்துறை ஆணையர் ஹரிதர், எம்எல்ஏ அப்துல்வகாப், இணை ஆணையர் கவிதா பிரியதர்ஷினி.

பதவிக்காலம் முடிவதற்கு முன்பே

இந்திய சூரியசக்தி கழக தலைவர் டிஸ்மிஸ்

● அதானி ஊழல்களை மறைக்க முடியாது ● காங். தாக்கு

புதுடெல்லி, மே 13: கடந்த ஆண்டு நவம்பரில், அதானி நிறுவனம் இந்தியாவில் சூரிய சக்தி மின் திட்ட ஒப்பந்தங்களை பெற ரூ.2029 கோடி லஞ்சம் வழங்கியதாக அமெரிக்கா குற்றம்சாட்டியது. இது தொடர்பாக அமெரிக்க நீதிமன்றத்தில் அதானி மீது வழக்கு தொடரப்பட்டது. சூரிய மின் சக்தி திட்டங்களில் முதலீடு செய்வதற்காக என்று கூறி அமெரிக்க முதலீட்டாளர்களிடம் பெற்ற பணத்தை லஞ்சமாக அதானி கொடுத்தார் என்று குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த முறைகேட்டில் ஒன்றிய அரசின் இந்திய சூரிய சக்தி கழகத்துக்கு முக்கிய பங்கு இருப்பதாக அமெரிக்கா குற்றம்சாட்டியது. ஆனால், இந்த குற்றச்சாட்டை அதானி குழுமம் மறுத்துள்ளது.

இந்த நிலையில், இந்திய சூரிய சக்தி கழக(எஸ்இசிஐ) தலைவராக பணியாற்றி வந்த ராமேஷ்வர் பிரசாத் குப்தாவை ஒன்றிய அரசு திடீரென டிஸ்மிஸ் செய்துள்ளது. இது தொடர்பாக கடந்த 10ம் தேதி ஒன்றிய பணியாளர் நல அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ராமேஷ்வர் பிரசாத் குப்தாவை இந்திய சூரிய ஆற்றல் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பதவியில் இருந்து பணி நீக்கம் செய்து ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த உத்தரவில் பணி நீக்கத்துக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பதவிக்காலம் முடிவதற்கு ஒரு மாதம் முன்பாகவே பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து புதிய மற்றும் புதுப்பிக்க எரிசக்தி துறையின் செயலாளர் சந்தோஷ் குமார் சாரங்கிக்கு இந்திய சூரிய ஆற்றல் கழக(எஸ்இசிஐ) தலைவர் பதவி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆர்.பி.குப்தாவை பதவி நீக்கம் செய்வதால் அதானியின் ஊழல்களை மறைக்க முடியாது என காங்கிரஸ் விமர்சித்துள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் பொதுசெயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தன் எக்ஸ் பதிவில், "தொழிலதிபர் கவுதம் அதானி மற்றும் அவரது நெருங்கிய கூட்டாளிகள் மீது அமெரிக்க அதிகாரிகள், கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் 20ம் தாக்கல் செய்த ஊழல் தொடர்பான குற்றப்பத்திரிகையில் பொதுத்துறை நிறுவனமான : இந்திய சூரிய சக்தி கழகமும் சேர்க்கப்பட்டுள்ளது.

எஸ்இசிஐ-யின் பரிந்துரை அடிப்படையில் பல்வேறு மாநிலங்கள் அதானியுடன் கொள்முதல் ஒப்பந்தங்களை மேற்கொண்டன. இந்த ஒப்பந்தங்களுக்கு ஈடாக இந்திய அரசு அதிகாரிகளுக்கு ரூ. 2,029 கோடி லஞ்சம் தரப்பட்டதாகவும், பின்னர் ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஒப்பந்தம் வழங்கியதில் ஊழல் நடந்ததாக மறைமுகமாக ஒப்புகொண்ட எஸ்இசிஐ, பின்னர் 2024 டிசம்பரில் மின்சார ஒப்பந்தம் வழங்கும் முறையை மாற்றியது.

இப்போது இந்திய சூரியசக்தி கழக தலைவராக நியமிக்கப்பட்ட ஆர்.பி.குப்தா பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். எஸ்இசிஐ தலைவரை மாற்றுவதால் அதானி மற்றும் அவரது கூட்டாளிகள் மீது அமெரிக்காவின் ஊழல் குற்றச்சாட்டை மறைக்க முடியாது" என விமர்சித்துள்ளார்.

ஆதரவற்றோர் காப்பகத்தில்

கிணற்றில் தள்ளி சிறுவன் கொலை

ராஜபாளையம், மே 13: ஆதரவற்றோர் காப்பகத்தில் இருந்த சிறுவனை மனநலம் பாதித்த வாலிபர் கிணற்றில் தள்ளி கொன்ற சம்பவம் ராஜபாளையத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் ஆசிரியர் குடியிருப்பில் தனியார் ஆதரவற்றோர் காப்பகம் உள்ளது. இங்கு சாய் சஞ்சீவி (6) என்ற சிறுவன் தங்கியிருந்தான். நேற்று முன்தினம் நள்ளிரவு காப்பகத்தில் சிறுவன் தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது அதே காப்பகத்தில் வசித்து வந்த மனநலம் பாதிக்கப்பட்ட நவீன் (22) என்ற வாலிபர் பின்பக்க கதவு வழியாக சிறுவனை தூக்கிச் சென்று அருகே உள்ள விவசாய கிணற்றில் தள்ளியுள்ளார்.

காலையில் சிறுவனை காப்பக உரிமையாளர்கள் தேடினர். அப்போது, நவீன் கிணற்றின் அருகே இருந்து வருவதை பார்த்துள்ளனர். சந்தேகம் அடைந்து அங்கு சென்று பார்த்த போது, சிறுவன் கிணற்றில் சடலமாக மிதப்பது தெரியவந்தது. இது குறித்து தகவல் அறிந்த ராஜபாளையம் தெற்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, சிறுவனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்குப்பதிந்து நவீனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக

பல கோடி ரூபாய் மோசடி காஞ்சிபுரம் வாலிபர் கைது

நாகையில் இருந்து கப்பலில் இலங்கை தப்ப முயன்ற போது சிக்கினார்

நாகப்பட்டினம், மே 13: வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி தமிழகம் முழுவதும் பல கோடி ரூபாய் வரை மோசடி செய்ததாக காஞ்சிபுரம் வாலிபர் கைது செய்யப்பட்டார்.

காஞ்சிபுரம் மாவட்டம் பொழிச்சலூர் பிரேம்நகரை சேர்ந்தவர் கிருபாகரன் (37). இவர், தமிழகம் முழுவதும் உள்ள இளைஞர்களிடம் வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி பலகோடி ரூபாய் வரை மோடி செய்து தலைமறைவானதாக பல்வேறு காவல் நிலையங்களில் வழக்கு உள்ளது. அதே போல் நாகப்பட்டினம் கல்லரைதோட்டம் உப்பளம் சாலையை சேர்ந்த பானுமதி உள்ளிட்ட சிலரிடம் வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.10 லட்சத்து 50 ஆயிரம் மோசடி செய்ததாக நாகப்பட்டினம் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது.

இதுதொடர்பாக போலீசார் தலைமறைவான கிருபாகரனை தேடி வந்தனர். மேலும் தமிழகம் முழுவதும் பல இடங்களில் மோசடி செய்துள்ளதால் கிருபாகரன் தேடப்படும் குற்றவாளி என போட்டோவுடன் விமான நிலையங்கள், துறைமுகங்களில் போலீசார் சார்பில் நோட்டீஸ் ஒட்டப்பட்டது. இந்நிலையில் நாகப்பட்டினத்தில் இருந்து கப்பல் மூலமாக கிருபாகரன் இலங்கைக்கு தப்பி செல்வதாக நாகப்பட்டினம் குற்றப்பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் வந்தது. இதையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள் நாகப்பட்டினம் துறைமுகத்தில் நேற்று முன்தினம் அதிரடி சோதனை மேற்கொண்டனர். அப்போது கப்பலில் இலங்கை தப்பி செல்வதற்காக வந்த கிருபாகரனை அதிகாரிகள் சுற்றிவளைத்து பிடித்து, நாகப்பட்டினம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து கிருபாகரனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி
மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய (1) திரு. B. செல்வகுமார், த/பெ. T. பாலகிருஷ்ணன், எண்.20/34, 3வது குறுக்கு தெரு, ஆனந்தம் நகர், திருவேற்காடு, அயப்பாக்கம், சென்னை - 600077. (2) திருமதி S. விமலா, க/பெ. B. செல்வகுமார், எண்.20/34, 3வது குறுக்கு தெரு, ஆனந்தம் நகர், திருவேற்காடு, அயப்பாக்கம், சென்னை - 600077 ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை 08-05-2025 அன்றுள்ளபடி ரூ. 27,90,773/- (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து தொண்ணூறாயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று மட்டும்) மற்றும் 09-05-2025 முதல் பின்வட்டி மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம். விதி 8(6)&9-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்
(T. பாலகிருஷ்ணன் மகன் திரு. B. செல்வகுமார்-க்கு சொந்தமான சொத்து)

திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருவள்ளூர் இணை-1 சார்-பதிவாளர் அலுவலகம், வேப்பம்பட்டு கிராமம் திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 602024ல் 1,764 சதுர அடியில் 353 சதுர அடி பிரிவினை செய்யப்படாத பங்கு மற்றும் 757 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட குடியிருப்பு அடுக்குமாடி. ஃப்ளாட் எண்.15D-5, இரண்டாவது தளம், ஸ்ரீ ராகவேந்திரா நகர் இணையபின் பிளாட் எண்.15D, DTCP ஒப்புதல் எண்.395/2021/26ல், அடங்கிய சர்வே எண்101/1C of 192/87 உள்ளது. அனைத்து துண்டுகளும் மற்றும் பாகங்களும் கொண்டது. எல்லைகள் : வடக்கில் : பாலாஜி நகர், தெற்கில் : 16 அடி ரோடு, கிழக்கில் : பிளாட் எண்.15-C, மேற்கில் : பிளாட் எண்.15-E. அளவுகள் : கிழக்கு- மேற்காக வடக்கு பக்கம் - 25 அடி 9 அங்குலம், கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் - 25 அடி 0 அங்குலம். வடக்கு-தெற்காக கிழக்கு பக்கம் - 66 அடி 3 அங்குலம், வடக்கு-தெற்காக மேற்கு பக்கம் - 72 அடி 9 அங்குலம். மொத்தம் 1,764 சதுர அடி.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 14,00,000/-
(ரூபாய் பதிநான்கு லட்சம் மட்டும்)

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விவரம்

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி : 02-06-2025

இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், வேலப்பஞ்சாவடி கிளை, எண்.135, பூந்தமல்லி ஹை ரோடு, புவனா நர்சரி அவென்யூ, வேலப்பஞ்சாவடி, சென்னை, திருவள்ளூர் - 600077. தொலைபேசி எண். 044-26492062, செல் எண். 9362946859.

மறு-டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்துபூர்வமான ஒரு உறுதிமொழியினையும் அளிக்க வேண்டும். (2) விருப்பமுடைய டெண்டர்தாரர்/ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், வேலப்பஞ்சாவடி கிளை, எண்.135, பூந்தமல்லி ஹை ரோடு, புவனா நர்சரி அவென்யூ, வேலப்பஞ்சாவடி, சென்னை, திருவள்ளூர் - 600077ல் பெற்றுக் கொள்ளலாம். (3) விருப்பமுடைய டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று நண்பகல் 12.00 மணி அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். (4) விருப்பமுள்ள டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் சொத்தினை பார்வையிடவும் மற்றும் இதர விவரங்களுக்கும் தொலைபேசி எண். 044-26492062, செல் எண். 9362946859ஐ தொடர்பு கொள்ளவும். (5) இந்த சொத்து(க்கள்) "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" என்ற நிலையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இங்கு அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று பிற்பகல் 01.00 மணிக்கு திறக்கப்படும். பொதுவாக, மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்த போதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்புள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில், வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில், அதிகபட்ச ஏலம் கோருபவருக்கே. இந்த விற்பனை வழங்கப்படும். எனினும், இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றிபெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை விலையில் 25% தொகையை (பிணைவைப்புத் தொகை செலுத்தியது உள்பட) விற்பனை உறுதி செய்யப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்தத் தவறினால் அவரால் செலுத்தப்பட்ட 25% தொகை முழுவதையும் அவர் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் மொத்த விற்பனை தொகையையும் பெற்றுக்கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sale Certificate) வழங்கப்படும். (9) பத்திர செலவு, பதிவுக் கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளை வெற்றிபெற்ற ஏலம்கேட்டவரே ஏற்க வேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வீட்டு வரி, மின்சாரக் கட்டணம், TDS, GST மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம்கேட்டவரே செலுத்த வேண்டும். (11) எந்தவித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

இடம் : கும்பகோணம், தேதி : 12-05-2025 அதிகாரபூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287,
போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.
OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
CIN : U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91-93446 84194/98840 62068 / 99623 33307

[பிற்சேர்க்கை - IV-A]
[பார்க்க விதி - 8(6) & 9(1)]
அசையாச் சொத்தின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (EHFL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை மின்–ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 33/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 30.03.2021 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. அதையடுத்து OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ